# சென்னை மெட்ரோ ரயிலில் மாதாந்திர பாஸ் அறிமுகம்

சென்னை, மார்ச், 17

சென்னை நகரை நவீனப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்டது தான் மெட்ரோ திட்டம். பல்வேறு கட்டங்களை கடந்து இன்று சென்னையின் பல்வேறு முக்கிய இடங்களை இணைக்கும் பணியில் மெட்ரோ ரயில் சேவை முக்கிய பங்காற்றி வருகிறது.

இதில் பயணம் செய்பவர்களுக்கு ஒரு மாதம் அளவில்லா பயணத்திற்கான பாஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கட்டணம் ரூபாய் 2500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 50 வைப்புத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் கூறியதாவது: -

அதிகாரிகள் சுற்றுலா பயணிகள் வியாபார தொழிலதிபர்கள் என பலதரப்பட்ட மக்களும் இந்த திட்டத்தின் மூலம் பயன் அடைவார்கள். தற்போது தினசரி பயணம் செய்வதற்கான ரூபாய் 100 மதிப்பிலான அட்டை திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இந்த புதிய திட்டத்தின் மூலம் ரூபாய் 2500 ரூபாய் கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் இதன்மூலம் 45 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் செய்து கொள்ளலாம்.

இந்தத்திட்டம் ஒரு நபர் 30 நாட்கள் அளவற்ற பயணம் செய்து கொள்ள ஏற்படுத்தப்பட்டதாகும். மேலும் சென்னை மெட்ரோ நிர்வாகம் சார்பில் 10 சதவீதம் 20 சதவீத தள்ளுபடி வழங்கும் ஸ்மார்ட் கார்டு போன்ற திட்டங்களும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

ஏற்கனவே கிடைக்கப் பெற்ற தகவலின் படி மெட்ரோ ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளின் 30 சதவீதம் பேர் ஸ்மார்ட் கார்டுகளையும் 30 சதவீதம் பேர் கார்டுகள் திட்டத்தையும் பெற்று பயன்பெறுகின்றனர். ஆனால் 40 சதவீதம் பேர் தினசரி டோக்கன் வாங்கி தான் பயணம் செய்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.